செ.வெ.எண்: 50 நாள்:27.02.2020

## கரூர் மாவட்டம்

### மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் குழுவின் தலைவரும், கரூர் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வி.செ.ஜோதிமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது

**அதன் விபரம் வருமாறு:**

கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மாவட்ட அபிவிருத்தி மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் குழுவின் தலைவரும், கரூர் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வி.செ.ஜோதிமணி அவர்கள் தலைமையில் இன்று (27.02.2020) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், மத்திய அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் துறைவாரியாக விரிவாக ஆய்வு மேற்கொணடார். அரசின் திட்டங்களுக்கு பயனாளிகள் எவ்வாறு தேர்வு செய்யப்படுகின்றனர், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது, கொடுக்கப்பட்ட இலக்கீடுகள் முறையாக எய்தப்பட்டுள்ளதா, எடுக்கப்பட்ட பணிகள் குறித்த காலத்திற்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டதா என்பது குறித்தும், நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் அவை எப்போது முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் என்பது குறித்தும் ஒவ்வொரு துறை அலுவலர்களிடமும் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் விரிவாக ஆய்வு செய்தனர்.

மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை, வருவாய்த்துறை, நகராட்சிகள், தமிழ்நாடு மின்சார வாரியம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட தொழில் மையம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களான தீன்தயாள் உபாத்யாய கிராம ஜோதி யோஜ்னா திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட மின் மேம்பாட்டுத்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம், நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படும் ஊரக சாலைகள் மேம்பாடு திட்டம், பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத்திட்டம், பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா திட்டம்,பிரதான் மந்திரி கவுசல் விகாஷ் யோஜனா, தேசிய ஊரக குடிநீர் வழங்கும் திட்டம், பாதாள சாக்கடை திட்டம் (அம்ரூத் திட்டம்), தேசிய நலக் குழுமம், உட்கட்டமைப்பு தொடர்பாக பணிகள் தொலை தொடர்பு, அஞ்சல் துறை, தேசிய நெடுஞ்சாலை, சுகம்யா பாரத் அபியான், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்து ஆய்வு செய்தனர்.

பின்னர், பேசிய கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி வட்டம் ஆண்டிப்பட்டிகோட்டை, க.பரமத்தி, தரகம்பட்டி, ஆகிய பகுதிகளில் கூடுதலாக வங்கி கிளைகளை நிறுவ முன்னோடி வங்கியின் மேலாளருக்கு அறிவுறுத்தினர். மேலும், கிராமங்கள் தோறும் தனி நபர் கழிவறை குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், கிராமங்கள் தோறும் உள்ள ஆரம்ப சுகதார நிலையங்களில் செவிலியர்கள் கர்ப்பபை புற்றுநோய் தொடர்பாக சிறப்பு முகாம் நடத்தி பொது மக்களுக்கு விழிப்புணர்வு எற்படுத்த வேண்டும். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு முலம் பெண் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான துண்டு பிரசுரம், கையேடு ஆகியவைகளை பொது இடங்களில் மக்களுக்கு விழிப்புணர்வு எற்படுத்த வேண்டும் என அலுவலர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மகளிர் திட்ட இயக்குநர் திரு.சுப்பிரமணியன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.பாலகிருஷ்ணன், கரூர் வருவாய் கோட்டாச்சியர் திருமதி வ.சந்தியா, நியமன உறுப்பினர்களான திருமதி.எஸ்.உஷா, திருமதி.பி.சித்ரா, திரு.சி.ஆர்.வடிவேல், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திருமதி.வளர்மதி, பேரூராட்சிகளின் துணை இயக்குநர் திரு.குருராஜன்,. உள்ளிட்ட அனைத்துத்துறைகளைச்சேர்ந்த முதல்நிலை அலுவலர்கள் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்கள் திரு.ராஜ்குமார்(முன்னூர்), திருமதி.செல்வி(நடந்தை), திரு.சிவாஜி (வெஞ்சமாங்கூடலூர் கிழக்கு), திரு.லீலா(முள்ளிபாடி), திரு.மாணிக்கம்(மேலப்பகுதி) உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.